www.freetnbooks.com

Tsi10S

தென்காசி மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2025

-----

வகுப்பு 10

கால அளவு: 3.00 மணிநேரம் | அறிவியல் | மதிப்பெண்கள்: 75

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு: 12×1=12**

1) ஒரு கிலோ கிராம் எடை என்பது ______ற்கு சமமாகும்
a) 9.8 டைன் b) $9.8\times10^4$ N c) $98\times10^4$ டைன் d) 980 டைன்

2) விழி ஏற்பமைவுத் திறன் குறைபாட்டைச்சரி செய்ய உதவுவது ______
a) குவிலென்சு b) குழிலென்சு c) குவி ஆடி d) இரு குவிய லென்சு

3) மின்கடத்து எண்ணின் அலகு ______
a) மோ b) ஓம் c) ஓம்$^{-1}$ மீ$^{-1}$ d) மோ$^{-1}$ மீ$^{-1}$

4) 1 மோல் நைட்ரஜன் அணுவின் நிறை ______
a) 28 a mu b) 14 amu c) 28 கி d) 14 கி

5) எப்சம் உப்பின் மூலக்கூறு வாய்ப்பாடு ______
a) $CuSO_4.5H_2O$ b) $MgSO_4.7H_2O$ c) $CaSO_4.2H_2O$ d) $FeSO_4.7H_2O$

6) ஹேலஜன் குடும்பம் எந்த தொகுதியைச் சார்ந்தது
a) 17வது b) 15வது c) 18வது d) 16வது

7) பாலூட்டிகள் ______ விலங்குகள்
a) குளிர் இரத்த b) வெப்ப இரத்த c) பாய் கிலோதெர்மிக் d) இவை அனைத்தும்

8) நீராவிப் போக்கின் போது வெளியேற்றப்படுவது ______
a) கார்பன்டை ஆக்சைடு b) ஆக்சிஜன்
c) நீர் d) இவை ஏதும் இல்லை

9) மூளையின் இருபுற பக்கவாட்டு கதுப்புகளையும் இணைக்கும் நரம்புப் பகுதி ______
a) தலாமஸ் b) ஹைபோதலாமஸ் c) பான்ஸ் d) கார்பஸ் கலோசம்

10) இலைத்துளையை மூடச் செய்யும் ஹார்மோன் ______
a) ஆக்சின் b) எத்திலின் c) அப்சிசிக் அமிலம் d) சைட்டோகைனின்

11) சின்கேமியின் விளைவால் உருவாவது ______
a) சூஸ்போர்கள் b) கொனிடியா
d) சைகோட் (கருமுட்டை) d) கிளாசிடோஸ்போர்கள்

12) ஒகசாகி துண்டுகளை ஒன்றாக இணைப்பது ______
a) டி.என்.ஏ. லிகேஸ் b) ஹெலிகேஸ்
c) டி.என்.ஏ. பாலிமெரேஸ் d) ஆர்.என்.ஏ. பிரைமர்

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. 22ஆவது வினா கட்டாய வினாவாகும். 7×2=14**

13) போக்குவரத்துச் சைகை விளக்குகள் சிவப்பு நிறத்தில் அமைக்கப்படுவதன் காரணம் என்ன?

14) சார்லஸ் விதியைக் கூறுக.

15) சரியா? தவறா? (தவறு எனில் கூற்றினை திருத்துக)
அ) மந்த வாயுக்கள் அனைத்தும் ஈரணு மூலக்கூறுகள் ஆகும்
ஆ) $CO_2$ன் மூலக்கூறு நிறை 42 கி.

16) குளிர் பிரதேசங்களில் நீர்வாழ் உயிரினங்கள் அதிகம் வாழ்கின்றன ஏன்?

17) ஒளிச் சேர்க்கையின் ஒட்டுமொத்த சமன்பாட்டை எழுதுக.

18) தமனிகளும், சிரைகளும் அமைப்பின் அடிப்படையில் எவ்வாறு வேறுபடுகின்றன?

19) 'போல்டிங்' என்றால் என்ன? அதை எப்படி செயற்கையாக ஊக்குவிக்கலாம்?

20) சூலக வட்டத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிக்கவும்.


21) ஒகசாகி துண்டுகள் என்றால் என்ன?

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



22) கீழ்க்கண்ட மின்சுற்றில் தொகுபயன் மின்தடையைக் காண்க.




C Christo
MA B.Ed
Tenkasi

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 32 கட்டாய வினாவாகும்.** **7×4=28**

23) அ) கிரிக்கெட் விளையாட்டில் மேலிருந்து விழும் பந்தினை பிடிக்கும் போது, விளையாட்டு வீரர் தம்கையினை பின்னோக்கி இழுப்பது ஏன்?

ஆ) ஸ்நெல்விதியைக் கூறுக.

24) LED விளக்கின் நன்மைகளை பட்டியலிடுக.

25) அ) ஓம்விதி - வரையறு.

ஆ) இயல்பு வாயு மற்றும் நல்லியல்பு வாயு - வேறுபடுத்துக.

26) அ) அணுக்கட்டு எண் - வரையறு.

ஆ) அலுமினியத்தின் பயன்கள் இரண்டு கூறுக.

27) காற்றுள்ள சுவாசம் மற்றும் காற்றில்லா சுவாசம் வேறுபடுத்துக.

28) அ) Rh காரணியைக் கண்டறிந்தவர் யார்? அது ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது?

ஆ) அனிச்சைவில் வரையறு.

29) நாளமுள்ளச் சுரப்பிக்கும் நாளமில்லாச் சுரப்பிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

30) அ) **பொருத்துக:**

| | | |
|---|---|---|
| i) பிளத்தல் | - | ஸ்பைரோகைரா |
| ii) மொட்டு விடுதல் | - | ஹைட்ரா |
| iii) துண்டாதல் | - | அமீபா |
| iv) மீளுருவாக்கம் | - | ஈஸ்ட் |

ஆ) மூவிணைவு வரையறு.

31) சென்ட்ரோமியரின் நிலைக்கு ஏற்ப குரோமோசோம்களை படம் வரைந்து வகைப்படுத்துக.

32) 15லி எத்தனால் நீர்க் கரைசலில், 3.5லி எத்தனால் கலந்துள்ளது. எத்தனால் கரைசலின் கனஅளவு சதவீதத்தைக் கண்டறிக.

**IV. *விரிவான விடையளி: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:*** **3×7=21**

33) அ) நியூட்டனின் இரண்டாம் விதியினைக் கூறுக.

ஆ) கிட்டப்பார்வை மற்றும் தூரப்பார்வை குறைபாடுகளை வேறுபடுத்துக.

**(OR)**

அ) மின்னிழை விளக்குகளில் டங்ஸ்டன் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் மின் உருகு இழையாக அதனை பயன்படுத்துவதில்லை. ஏன்?

ஆ) நல்லியல்பு வாயு சமன்பாட்டினை தருக.

34) அ) அணுக்கள், மூலக்கூறுகள் - வேறுபடுத்துக.

ஆ) ஒப்பு மூலக்கூறு நிறைக்கும் ஆவி அடர்த்திக்கும் உள்ள தொடர்பினை விவரி.

**(OR)**

அ) இரசக்கலவை என்றால் என்ன?

ஆ) ஈரம் உறிஞ்சும் சேர்மங்களுக்கும், ஈரம் உறிஞ்சிக்கரையும் சேர்மங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

35) அ) சுவாச ஈவு என்றால் என்ன?

ஆ) மூளையின் அமைப்பையும் பணிகளையும் விளக்குக.

**(OR)**

அ) தைராய்டு ஹார்மோன்கள் ஏன் ஆளுமை ஹார்மோன்கள் என்று அழைக்கப்படுகின்றன?

ஆ) பூக்கும் தாவரத்தில் உள்ள சூலகத்தின் அமைப்பை விளக்குக.

www.freetnbooks.com | FREETNBOOKS